**மே – 03**

# TNPSC துளிகள்

- இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் (IWAI) ஆனது, 2024-25 ஆம் நிதியாண்டில் 145.5 மில்லியன் டன் என்ற இதுவரையில் இல்லாத அதிகளவிலான சரக்குப் போக்குவரத்து பதிவானதாக அறிவித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஆறு மாதங்களுக்கு "விண்வெளி மற்றும் பெருமளவிலான பேரிடர்கள் மீதான சர்வதேச சாசனம்" எனும் முக்கிய அமைப்பின் தலைமைப் பொறுப்பை இஸ்ரோ ஏற்றுக் கொண்டுள்ளது.
- எண்ணிமச் சந்தைச் சட்டத்தினை (DMA) மீறியதற்காக ஆப்பிள் மற்றும் மெட்டா ஆகிய நிறுவனங்களுக்கு முறையே 500 மில்லியன் யூரோக்கள் (568 மில்லியன் டாலர்) மற்றும் 200 மில்லியன் யூரோக்கள் (227 மில்லியன் டாலர்) ஐரோப்பிய ஆணையம் ஆனது முதல் முறையாக அபராதம் விதித்துள்ளது.
- சுவச் பாரத்-நகர்ப்புறத் திட்டத்தின் கீழ், காஜியாபாத் நகரானது அதிநவீன மூன்றாம் நிலை கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை (TSTP) உருவாக்குவதற்காக என 150 கோடி ரூபாய் நிதி திரட்டுவதற்காக வேண்டி இந்தியாவின் முதல் சான்றளிக்கப்பட்ட பசுமை நகராட்சிப் பத்திரத்தினை வெற்றிகரமாக வெளியிட்டுள்ளது.
- 'இணைய சங்கேதப் பணங்கள், திரள் நிதியினைத் திரட்டல் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மூலம் தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை (CFT) எதிர்கொள்வது' என்பது தொடர்பான மத்திய ஆசியக் குடியரசுகளுக்கான (CARs) முதல் திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை இந்தியா ஏற்பாடு செய்திருந்தது.
  - ஐந்து மத்திய ஆசிய நாடுகளான உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல நிபுணர்களை இது ஒருங்கிணைத்தது.

# தேசியச் செய்திகள்

## NHRC - 'B' அந்தஸ்து




- தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவியக் கூட்டணியின் (GANHRI) ஒரு அங்கீகாரத்திற்கான துணைக் குழு (SCA) ஆனது இந்தியத் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தினை (NHRC) B அந்தஸ்துக்கு தரமிறக்கப் பரிந்துரைத்துள்ளது.

- இந்திய NHRC ஆனது தற்போது அதன் B அந்தஸ்தினை வங்க தேசம், லிபியா, பஹ்ரைன் மற்றும் துருக்கி போன்ற நாடுகளின் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளும்.
- எளிமையான கூறினால், இந்தப் பரிந்துரை இறுதியானால், இந்தியாவின் NHRC ஆனது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் பேசவோ அல்லது அதிகாரப் பூர்வமாக ஆவணங்களைச் சமர்ப்பிக்கவோ அல்லது வாக்களிக்கவோ முடியாது.
- 2016 ஆம் ஆண்டில், இந்திய NHRC அமைப்பின் A-தர அங்கீகாரத்தினை GANHRI குழுவின் அங்கீகாரத்திற்கான துணைக் குழு ('SCA') முதல் முறையாக ஒத்திவைத்தது.
- 2023 ஆம் ஆண்டில், SCA ஆனது இரண்டாவது முறையாக இந்திய NHRC அமைப்பின் அங்கீகாரத்தினை ஒத்தி வைத்தது.

## IN-SPACe மையத்தில் SBaaS




- இஸ்ரோவின் ஒரு வணிகப் பிரிவான இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) ஆனது, Satellite Bus as a Service (SBaaS) எனும் முக்கிய முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது செயற்கைக்கோள் உருவாக்கத்தில் தனியார் துறையின் பெரும்பங்களிப்பை மிக நன்கு ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்திய அரசு சாரா நிறுவனங்களால் (NGEs) வடிவமைக்கப்பட்டச் சாதனங்களை சுமந்து செல்வதற்கான சிறிய செயற்கைக்கோள் ஏவுகலன்களை உருவாக்கும்.
- இந்த SBaaS என்ற புதிய மாதிரியானது, புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தனியார்

நிறுவனங்களுக்காக வேண்டி ஏவப்படத் தயாரான நிலையிலான செயற்கைக்கோள் தளங்களுக்கான அணுகலை எளிதாக்கும்.

## தேசியப் பாதுகாப்பு ஆலோசனை வாரியம் 2025

- மத்திய அரசானது, தேசியப் பாதுகாப்பு ஆலோசனை வாரியத்தினை (NSAB) தற்போது புதுப்பித்துள்ளது.
- ஆராய்ச்சி & பகுப்பாய்வுப் பிரிவின் (RAW) முன்னாள் தலைவர் அலோக் ஜோஷியை அதன் புதியத் தலைவராகவும், மேலும் ஆறு உறுப்பினர்களையும் நியமித்துள்ளது.
- NSAB என்பது தேசியப் பாதுகாப்பு சபை செயலகத்திற்கு உள்ளீடுகளை வழங்கும் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் உச்ச நிலை அமைப்பாகும்.
- இந்த மறுசீரமைப்பு குறித்த முடிவானது பிரதமர் தலைமையிலான பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழுவால் எடுக்கப் பட்டது.
- இது 16 உறுப்பினர்கள் கொண்ட அந்த வாரியத்தின் பாதி உறுப்பினர்களது (எட்டு பேர்) மறுசீரமைப்பைக் கண்டுள்ளது




## சாதிவாரிக் கணக்கெடுப்பு நிலை 2025

- பிரதமர் தலைமையிலான அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஆனது (CCPA), அடுத்து மேற்கொள்ள உள்ள மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சாதி வாரிப் பதிவினை மேற்கொள்ள அங்கீகரித்துள்ளது.
- 1951 முதல் 2011 ஆம் ஆண்டு வரையில் சுதந்திர இந்தியாவில் நடத்தப்பட்ட ஒவ்வொரு

மக்கள் தொகை கணக்கெடுப்பிலும் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப் பட்ட பழங்குடியினர் பற்றிய தரவுகளை வெளியிட்டது ஆனால் மற்ற சாதிகள் பற்றிய தரவுகளை வெளியிடவில்லை.


- அதற்கு முன்னதாக, 1931 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் சாதி பற்றிய தரவு இருந்தது.
- இருப்பினும், 1941 ஆம் ஆண்டில், சாதி அடிப்படையிலான தரவுகள் சேகரிக்கப்பட்டன ஆனால் அவை எதுவும் வெளியிடப்படவில்லை.
- மண்டல் ஆணையம் ஆனது, இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் (OBC) மக்கள் தொகையை 52% என மதிப்பிட்டது.
- இந்திய அரசியலமைப்பின் 246வது சரத்தின் படி, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆனது ஏழாவது அட்டவணையின் மத்தியப் பட்டியலில் 69வது இடத்தில் பட்டியலிடப் பட்டுள்ளதால், இது ஓர் ஒன்றிய அரசின் கீழ் உள்ள விவகாரமாக அமைகிறது.
- 2022 ஆம் ஆண்டில், சுதந்திர இந்தியாவில் அனைத்துச் சாதிகளையும் வெற்றிகரமாக கணக்கெடுத்த முதல் மாநிலமாக பீகார் மாறியது.
- பின்னர், கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய இரு மாநிலங்களும் சாதிவாரிக் கணக்கெடுப்பை மேற்கொண்டன.




## EVolutionS திட்டம்

- இந்திய நாட்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) ஆனது, 'புத்தொழில் நிறுவனங்களால் முன் வைக்கப்பட்ட மின்சார வாகனத் தீர்வுகள் (EVolutionS)' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, நாட்டிற்குள் மின்சார வாகன (EV) கூறுகளின் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் புத்தொழில் நிறுவனங்கள் ஆனது, தங்கள் மிகப் புதுமையான முன்மாதிரிகளை வணிக ரீதியாக சாத்தியமானத் தயாரிப்புகளாக மாற்றுவதற்கு உதவுவதில் கவனம் செலுத்தப்படுகிறது.
- இது இரண்டு, மூன்று மற்றும் 4 சக்கர மின்சார வாகனங்களுக்குப் பொருந்தும் என்ற நிலையில் மின்சார ரிக்ஷா வாகனங்கள் (L5), மின்சார வண்டிகள் மற்றும் மின்சாரப் பேருந்துகள் ஆகியவற்றிற்கும் இது பொருந்தும்.

- 30 லட்சம் ரூபாய் சமபங்குச் சார் நிதியளிப்பு உட்பட, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு புத்தொழில் நிறுவனத்திற்கும் 50 லட்சம் ரூபாய் நிதியளிக்கப்படுகிறது.




## இந்தியா குறித்த சிறப்பு 301 அறிக்கை 2025




- இந்தியாவின் அறிவுசார் சொத்துரிமைகள் (IPR) பாதுகாப்பு நிலை மற்றும் அமலாக்கம் குறித்த பல்வேறு கவலைகளை மேற்கோள் காட்டி, அமெரிக்கா இந்தியாவை அதன் 'முன்னுரிமை கண்காணிப்புப் பட்டியலில்' சேர்த்துள்ளது.
- அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி (USTR) அலுவலகமானது, அதன் மிகவும் சமீபத்திய அறிக்கையில், இந்தியாவினை "அறிவுசார் சொத்துரிமையின் (IP) பாதுகாப்பு மற்றும் அமலாக்கத்தைப் பொறுத்தவரை மிகவும் சவாலான பெரியப் பொருளாதாரங்களில் ஒன்றாக" குறிப்பிட்டுள்ளது.

- இந்த அறிக்கையானது, அறிவுசார் சொத்துரிமை அமலாக்கத்தைப் பொறுத்தவரை, இந்தியாவை உலகின் மிகவும் ஒரு "சவாலான பெரியப் பொருளாதாரங்கள்" என்றும் குறிப்பிட்டுள்ளது.
- இது சுமார் 100க்கும் மேற்பட்ட தன் வர்த்தகப் பங்குதாரர்களை மதிப்பிட்டு, அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமெரிக்காவின் தர நிலைகளை மிக நன்கு பூர்த்தி செய்யாத நாடுகளை அடையாளம் காட்டுகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு வர்த்தகத்தினை சுமார் 500 பில்லியன் டாலர்களாக அதிகரிக்கும் ஒரு நோக்கில் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தினை மேற்கொள்வதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் தற்போது பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன.
- இந்த ஒப்பந்தம் ஆனது, 2024–25 ஆம் ஆண்டில் 41.18 பில்லியன் டாலர்களாக இருந்த இந்தியாவுடனான அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## பொலிவியாவின் "ஜாம்பி" எரிமலை – உடுருங்கு





- தென் அமெரிக்காவில் உள்ள ஒரு செயலற்ற எரிமலையானது பல தசாப்தங்களாக வெடிப்பதற்கான சாத்தியமான அறிகுறிகளைக் கொண்டிருந்ததற்கான மர்மத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பொலிவியாவின் ஆண்டிஸ் மலைகளில் அமைந்துள்ள உடுருங்கு என்ற ஒரு செயலற்ற எரிமலையானது கடந்த 250,000 ஆண்டுகளாக வெடிக்கவில்லை.
- 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து, அந்த எரிமலை அமைப்பின் மையத்தில் உள்ள நிலம் உயர்ந்து, அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகள் கீழமுங்கி வருவதால், உடுருங்குவைச் சுற்றியுள்ள நிலப்பரப்பு ஆனது "சோம்ப்ரெரோ" வடிவத்தில் சிதைந்து விட்டதாகத் தெரிகிறது.
- கடந்த 50 ஆண்டுகளில், மைய உயர்வு ஆண்டுக்கு 0.4 அங்குலங்கள் வரை உயர்ந்து வருகிறது.
- அதிர்வொலி மற்றும் அமைதியின்மைக்கான பிற அறிகுறிகள் ஆனது பள்ளத்தின்

அடிப்பகுதியில் திரவம் மற்றும் வாயுவின் இயக்கத்தின் காரணமாக ஏற்படும் ஒரு விளைவாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் தீர்மானித்தனர்.

- உடுருங்கு ஆனது புவியின் மேலடுக்கில் உள்ள உலகின் மிகப்பெரிய அறியப்பட்டப் பாறைக் குழம்பு அமைப்பிற்கு மேலே அமைந்துள்ளது.

## PEN-Plus அணுகுமுறை




- PEN-Plus அணுகுமுறையை ஏற்றுக் கொண்டதிலிருந்து இருபது ஆப்பிரிக்க நாடுகள் ஆனது, கடந்த நான்கு ஆண்டுகளில் கடுமையான தொற்று அல்லாத நோய்களுக்கான (NCDs) சேவைகளுக்கான அணுகலை அதிகரித்துள்ளன.
- 2019 ஆம் ஆண்டில் மட்டும், உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் 2.8 மில்லியனுக்கும் மிக அதிகமான NCD தொடர்பான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்ற நிலையில் இது ஒரு நாளைக்கு சுமார் 7,900க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளுக்குச் சமமாகும்.
- இந்தப் பிராந்தியத்தில், 2000 ஆம் ஆண்டில் சுமார் 8.7 மில்லியனாக பதிவான மொத்த உயிழப்புகளின் எண்ணிக்கையானது 2019 ஆம் ஆண்டில் 7.8 மில்லியனாகக் குறைந்து உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் அனைத்து உயிரிழப்புகளிலும் NCD தொடர்பான உயிரிழப்புகள் 37 சதவீதமாகப் பதிவாகியுள்ளதுடன் NCD தொடர்பான உயிரிழப்புகள் மட்டும் திடீரென அதிகரித்தன என்பதோடு இது 2000 ஆம் ஆண்டில் 24 சதவீதமாக இருந்தது.
- ஓர் ஒருங்கிணைந்தச் சுகாதாரப் பராமரிப்பு விநியோக மாதிரியான PEN-Plus, முதலில் ருவாண்டாவில் தீவிர வறுமை நிலையில் வாழும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இந்நலச் சேவையினை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது.
- இது முதன்மையாக ஆரம்ப சுகாதார நலச் சேவை மட்டத்தில் மிகவும் பொதுவான NCD பாதிப்புகளை நிர்வகிப்பதில் ஒரு கவனம் செலுத்துகின்ற, உலக சுகாதார அமைப்பின் அத்தியாவசிய தொற்று அல்லாத நோய்த் தடுப்புத் திட்டங்களின் தொகுப்பிற்கு மிக இணையாக உருவாக்கப்பட்டுள்ளது.


# பொருளாதாரச் செய்திகள்

## தனியார் துறை மூலதனச் செலவினக் கணக்கெடுப்பு 2021-22/2024-25

- 2024-25 ஆம் நிதியாண்டிற்கான திட்டமிடப்பட்ட மூலதனங்கள் செலவினமானது ஆண்டிற்கு 55.5 சதவீதம் அதிகரித்து 6.56 லட்சம் கோடி ரூபாயாக மதிப்பிடப் பட்டு

உள்ளது.

- 2025-26 ஆம் நிதியாண்டில் தனியார் துறை நிறுவனங்களின் மூலதனச் செலவினம் ஆனது, 25.5 சதவீதம் சரிவுடன் 4.89 லட்சம் கோடி ரூபாயாகப் பதிவாக வாய்ப்புள்ளது.
- 2025-26 ஆம் நிதியாண்டிற்கான திட்டமிடப்பட்ட மூலதனச் செலவினம் 2024-25 மற்றும் 2022-23 ஆம் நிதியாண்டுகளில் இருந்த நிலைகளிலிருந்து மிகக் குறைவாகவும், 2023-24 மற்றும் 2021-22 ஆம் நிதியாண்டுகளில் இருந்த நிலைகளுக்குச் சற்று அதிகமாகவும் காணப் படுகிறது.
- ஒட்டு மொத்தமாக, 2021-22 முதல் 2024-25 வரையிலான நான்கு ஆண்டுகள் காலத்தில் மொத்த மூலதனத்தில் 66.3 சதவீதம் அதிகரிப்பு என்பது பதிவாகியுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் பதிவான மிகவும் அதிகபட்ச மூலதனச் செலவினம் 6.56 லட்சம் கோடி ரூபாயாகும்.
- 2024-25 ஆம் ஆண்டில், ஒரு நிறுவனமானது புதியச் சொத்துக்களை வாங்குவதற்காக மதிப்பிடப் பட்ட தற்காலிக மூலதனச் செலவினம் 172.2 கோடி ரூபாயாகும்.
- தனியார் பெருநிறுவனங்கள் துறையில் ஒரு நிறுவனத்திற்கான சராசரியான மொத்த நிலையான சொத்து (GFA) ஆனது 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 3,151.9 கோடி ரூபாயாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- இது 2022-23 ஆம் ஆண்டில் 4 சதவீதம் அதிகரித்து,  3,279.4 கோடி ரூபாயாகவும், 2023-24 ஆம் ஆண்டில் 27.5 சதவீதம் அதிகரித்து 4,183.3 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### லேபியோ உரு மற்றும் லேபியோ செகிடா – கேரளா

- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இருந்து லேபியோ உரு மற்றும் லேபியோ செகிடா எனப்படுகின்ற இரண்டு புதிதான நன்னீர் வாழ் மீன் இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- பாய்மரம் போன்ற நீளமான துடுப்புகளின் காரணமாக, பாரம்பரிய பாய்மரப் படகின் பெயரினால் பெயரிடப்பட்ட லேபியோ உரு கேரள மாநிலத்தின் சந்திரகிரி ஆற்றில் கண்டறியப்பட்டுள்ளது.
- 'காகா செகிடா' என்று உள்ளூரில் அறியப்படும் சிறிய, கருமையான உடல் கொண்ட மீன் இனமான லேபியோ செகிடா கேரளாவின் சாலக்குடி ஆற்றில் காணப்படுகிறது.
- இந்த இரண்டு இனங்களும், அந்தந்த நதி அமைப்புகளில் மட்டுமே காணப்படுகின்றன.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஐக்கிய நாடுகள் சபையின் உலக சமூகநிலை அறிக்கை 2025

- இந்த அறிக்கையானது, 'உலக சமூக அறிக்கை 2025: சமூக முன்னேற்றத்தை விரைவுப் படுத்துவதற்கான ஒருமித்த கருத்து கொண்ட ஒரு புதிய கொள்கை' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் - உலக மேம்பாட்டுப் பொருளாதார ஆராய்ச்சி நிறுவனத்துடன் (UNU-WIDER) இணைந்து ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறையால் (UN DESA) வெளியிடப்பட்டது.
- வாழ்க்கைத் திருப்தி குறித்த சமீபத்திய மதிப்பீட்டின்படி, உலகளவில் 60 சதவீத மக்கள் போராடி வருகின்றனர் என்பதோடு மேலும் 12 சதவீதம் பேர் துயருற்று வருகின்றனர்.
- 690 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஒரு நாளைக்கு 2.15 அமெரிக்க டாலர்களுக்குக் குறைவான வருமானம் கொண்டவர்களாக தீவிர வறுமை நிலையில் வாழ்கின்றனர்.
- உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் அதாவது ஒரு


நாளைக்கு 2.8 பில்லியனுக்கும் அதிகமானோர், 2.15 முதல் 6.85 அமெரிக்க டாலர்கள் வரையிலான வருமானத்தில் வாழ்கின்றனர்.

- இரண்டாவது உலக சமூக மேம்பாட்டு உச்சி மாநாடு ஆனது, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கத்தாரின் தோஹா நகரில் நடைபெற உள்ளது.




# மாநிலச் செய்திகள்

## தோரியம் சார்ந்த சிறிய அணு உலைகள்




- தோரியம் எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட சிறிய அணு உலைகளை (SMR) நிறுவுவதற்காக வேண்டி ROSATOM எனப்படுகின்ற ரஷ்யாவின் அரசிற்குச் சொந்தமான நிறுவனத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மகாராஷ்டிரா மாநில அரசானது கையெழுத்திட்டுள்ளது.

- ஒரு மாநில அரசானது அணுசக்தி துறையில் மற்றொரு நாட்டுடன் இணைவது இதுவே முதல்முறையாகும்.
- முதலுறு வேக ஈணுலை (FBR) ஆனது தொடக்கத்தில் யுரேனியம்-புளூட்டோனியம் கலந்த ஆக்சைடு (MOX) எரிபொருளைப் பயன்படுத்தும்.
- எரிபொருள் கருவத்தினைச் சுற்றியுள்ள யுரேனியம்-238 "படலம்" ஆனது மிகவும் அதிக எரிபொருளை உற்பத்தி செய்வதற்காக அணுசக்தி நிலைமாற்றத்திற்கு உட்படுத்தப் படுவதால் இது 'ஈணுலை' என்ற பெயரைப் பெறுகிறது.
- இந்தக் கட்டத்தில், ஒரு பிளவுப் பொருளாக அல்லாத தோரியம்-232 ஐசோடோப்பினைப் படலமாகப் பயன்படுத்துவது குறித்தும் கருத்தில் கொள்ளப்பட்டு வருகிறது.
- நிலைமாற்றம் மூலம், தோரியம் ஆனது பிளவுபட்ட யுரேனியம்-233 ஐசோடோப்பினை உருவாக்கும் என்பதோடு இது உலையின் மூன்றாவது கட்டத்தில் எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

## கரட் சுகாதாரக் கழிவு மேலாண்மை மாதிரி

- மகாராஷ்டிரா மாநிலத்தின் கரட் பகுதியில் சுகாதாரக் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் அகற்றுவதை உறுதி செய்வதன் மூலம் சுகாதாரக் கழிவு மேலாண்மையில் அம்மாநில அரசு ஒரு புதிய அளவுருவினை நிறுவியுள்ளது.
- இது சுகாதார மற்றும் உயிரி மருத்துவக் கழிவுகளை முற்றிலும் மிகப் பாதுகாப்பான முறையில் பிரித்தெடுத்தல், சேகரித்தல் மற்றும் அகற்றுதல் ஆகியப் பலவற்றை நன்கு மேற்கொண்டுள்ளது.
- பொதுக் கழிப்பறைகள் மற்றும் குப்பைகளை எடுத்துச் செல்லும் அந்த வாகனங்களில், சுகாதாரக் கழிவுகளுக்காக என பிரத்தியேகத் தொட்டிகள் பொருத்தப்பட்ட சிவப்புத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.




## போஹாக் பிஹு 2025

- ரோங்காலி பிஹு அல்லது சாத் பிஹு என்றும் அழைக்கப்படும் போஹாக் பிஹு ஆனது மிக முக்கியமான அசாமிய பண்டிகையாகும்.
- இது அசாமியப் புத்தாண்டு மற்றும் அதன் வசந்த கால அறுவடைப் பருவத்தின் ஒரு தொடக்கத்தைக் குறிக்கிறது.
- இது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 முதல் 20 ஆம் தேதி வரை அசாம் மாநிலம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

- அசாமில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மூன்று பிஹு பண்டிகைகளில் இது மிகவும் முக்கியமானதாகும்.
- மற்ற இரண்டு பிஹு பண்டிகைகள், கதி பிஹு (அக்டோபர்) மற்றும் மாக் பிஹு (ஜனவரி) ஆகும்.




## குஜராத் விண்வெளித் தொழில்நுட்பக் கொள்கை 2025-2030





- குஜராத் மாநில அரசானது, இந்தியாவிலேயே முதன்முறையாக விண்வெளித் தொழில் நுட்பத்தில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக '2025-2030 ஆம் ஆண்டு விண்வெளித் தொழில்நுட்பக் கொள்கையினை' அறிவித்துள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, 5 பில்லியன் டாலர்கள் (தோராயமாக 41,000 கோடி ரூபாய்) மதிப்பிலான முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25,000 திறன் சார் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கொள்கையானது, குஜராத்தைச் சேர்ந்த இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தையான விக்ரம் சாராபாய் அவர்களின் வாழ்வியல் மரபினால் ஈர்க்கப்பட்டது.
- இதற்கடுத்து ஒரு நாள் கழித்து, இஸ்ரோ போன்ற அரசு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட சில தொழில்நுட்பங்களைத் வெளிக்கொணரவும், தனியார் துறையின் ஈடுபாட்டை ஊக்குவிக்கவும், ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் தமிழ்நாடு விண்வெளி தொழில்துறைக் கொள்கையை தமிழ்நாடு அரசு வெளியிட்டு

உள்ளது.

- குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகியவைத் தவிர, தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் தங்கள் பிராந்தியங்களில் விண்வெளி உற்பத்தி தொகுதிகளை நிறுவச் செய்வதற்கான திறன்களை வளர்த்து வருகின்றன.

# இதரச் செய்திகள்

## 'கோல்கொண்டா நீலம்' வைரம்





- கோல்கொண்டா நீலம் எனப்படும் இந்திய நாட்டினைச் சேர்ந்த மிகப்பெரிய அறியப் பட்ட பொலிவுமிகு நீல நிற வைரமானது சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனீவாவின் ஒரு ஏலத்தில் இருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளது.
- 23.24 காரட் அளவிலான பேரிக்காய் வடிவ வைரம் ஆனது, ஒரு காலத்தில் இந்தூரை ஆட்சி செய்த மகாராஜா யஷ்வந்த் ராவ் ஹோல்கருக்கு (1908-1962) சொந்தமானது.
- தற்போது இதன் மதிப்பு 35 முதல் 50 மில்லியன் டாலர் வரை இருக்கலாம்.
- இது தற்போதையத் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள கோல்கொண்டா என்ற வைரச் சுரங்கத்தில் உருவானது.
- கோஹினூர் மற்றும் தரியா-ஐ-நூர் போன்ற உலகின் மிகச்சிறந்த வைரங்கள் இந்த கோல்கொண்டாவில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.
- தற்போது வைரங்கள் தொடர்பான தொழிற்துறையில் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ரஷ்யா ஆகிய சில முக்கிய நாடுகள் ஆகும்

## படிநிலை மேலாண்மை மற்றும் வேலை தரம் குறித்த ILO அறிக்கை

- 'சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் புரட்சியை ஏற்படுத்துதல்: வேலைகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் எண்ணிம மயமாக்கலின் பங்கு' என்ற தலைப்பிலான அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.

- இந்தியாவில் படிநிலை மேலாண்மை (AM) ஆனது, மிகவும் அதிகரித்த கண்காணிப்பு, மதிப்பிடல் மற்றும் வேலைத் தீவிரத்திற்கான "தெளிவான" சான்றுகளுடன் உள்ளதால் அது வேலை தரத்தில் சரிவுக்கு வழி வகுத்துள்ளது.
- தென்னாப்பிரிக்கா மற்றும் இந்தியாவில் வேலைக்கானத் தரத்தில் குறிப்பிடத்தக்க எதிர்மறை விளைவுகள் இல்லாமல், பிரான்சு மற்றும் இத்தாலி போன்ற நாடுகளில் AM தொழில்நுட்பங்கள் வேலை அமைப்பில் நேர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தின.
- AM என்பது மிகவும் விரிவான தரவுகள் சேகரிப்பு, கண்காணிப்பு, அதற்கான நிகழ்நேர முடிவெடுத்தல் மற்றும் அளவீடுகள் சார்ந்த சில மதிப்பீடுகள் மூலம் பணிகள் மற்றும் தொழிலாளர்களின் செயல்திறனை ஒதுக்கீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதைக் குறிக்கிறது.
- AM என்பது கிடங்குகள், தொழிற்சாலைகள், வாடிக்கையாளர் சேவை மையங்கள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் கட்டுமானத் துறை உள்ளிட்ட பல்வேறு வழக்கமான துறைகளுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.




## முதலாம் ரகுஜி போன்ஸ்லேவின் வாள்



- மகாராஷ்டிர மாநிலத்தின் அரசானது, மராட்டியப் போர்வீரன் முதலாம் ராஜே ரகுஜி போன்ஸ்லேவின் புகழ்பெற்ற வாளை இலண்டனில் நடைபெற்ற ஏலத்தில் 47.15 லட்சம் ரூபாய்க்கு மீட்டெடுத்துள்ளது.
- சேனா சாஹேப் சுபா என்பது மராட்டியப் பேரரசுடன் தொடர்புடைய உயர் இராணுவப் பதவியின் பட்டமாகும் என்பதோடு இது மிகப்பொதுவாக சாதாராவின் சத்ரபதிகளால்

வழங்கப்பட்டது.

- இந்தப் பட்டத்தைப் பெறுபவருக்கு ஒரு வாள் மற்றும் அங்கியும் வழங்கப்படும்.
- இந்தக் குறிப்பிட்ட வாள் ஆனது, சேனா சாஹேப் சுபா என்ற பட்டத்தைப் பெற்ற ரகுஜி ராஜே போன்ஸ்லேவுக்கு சத்ரபதி ஷாஹு மகாராஜ் வழங்கிய பரிசாக இருக்கலாம்.
- முதலாம் ரகுஜி போன்ஸ்லே மராட்டியப் பேரரசை ஒரிசா, பீகார், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய பல இடங்களுக்கும் விரிவுபடுத்தினார்.
- அவர் 1745 முதல் 1755 ஆம் ஆண்டு வரையில் வங்காளத்தில் நடைபெற்ற சில முக்கிய இராணுவப் படையெடுப்புகளை வழி நடத்தினார்.


## மண்ணின் ஈரப்பதம் - இடியுடன் கூடிய பெருமழை முன்னறிவிப்புக்கான குறி காட்டி




- பல்வேறு பகுதிகளில் திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளை ஏற்படுத்தச் செய்யும் கடுமையான இடியுடன் கூடிய பெருமழைக்கான ஒரு முன் எச்சரிக்கை சமிக்ஞையாக மண்ணின் ஈரப்பதம் இருக்கக்கூடும்.
- பெரிய அளவிலான வெப்பச்சலன மழை குவிய அமைப்பு (MCS) என்பது இங்கிலாந்தை விட பெரிய பகுதிகளில் பரவக் கூடிய, நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர்கள் வரையில் பயணிக்கக் கூடிய இடியுடன் கூடிய பெருமழைத் தொகுதிகள் ஆகும்.
- இந்த அமைப்புகளானது அடிக்கடி கடுமையான மழைப்பொழிவை ஏற்படுத்துவதால், உயிர்கள், கால்நடைகள் மற்றும் உள்கட்டமைப்புகளுக்குப் பரவலானச் சேதத்தினை ஏற்படுத்துகின்றன.
- வெப்பமண்டலப் பகுதிகளில் பதிவான மொத்த மழைப்பொழிவில் சுமார் 50 முதல் 90 சதவீதம் ஆனது MCS அமைப்புகளால் ஏற்படுகின்றன.
- இந்தியா, மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் அமெரிக்கா மற்றும் சீனாவின் சில பகுதிகள் MCS அமைப்புகளுக்கான முதன்மை மையங்களாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளாக உள்ளன.
- இதில் புயல் உருவாவதற்கு இரண்டு முதல் ஐந்து நாட்களுக்கு முன்னதாக மண்ணின் ஈரப்பதத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறியலாம்.
- நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்களுக்கு மேலான பரப்பில் காணப்படும் மண்ணில் உள்ள ஈரப்பதத்தின் அளவு என்பது மாறுபடுவதால் ஏற்படும் வளிமண்டல மாற்றங்கள்

புயலின் அளவு மற்றும் இருப்பிடத்தைப் பொறுத்து சுமார் 10 முதல் 30 சதவீதம் வரை மழைப்பொழிவின் பரப்பளவையும் அளவையும் அதிகரிக்கின்றன.

## ஸ்டெகோடன் கணேசா




- இது மகாராஷ்டிராவில் கண்டறியப்பட்ட இந்த வகையிலான முதல் இனமாகும்.
- இங்கு அழிந்துபோன ஸ்டெகோடன் கணேசா எனும் யானை இனத்தின் அரியப் புதை படிவங்கள் கண்டறியப்பட்டுள்ளது.
- இது ஒரு பழங்கால யானை இனமாகும்.
- இது நவீன கால ஆசிய யானைகளின் மூதாதைய இனமாகக் கூறப்படுகிறது.
- இந்தப் புதைபடிவங்கள் ஆனது, சுமார் 25,000 ஆண்டுகள் பழமையானவை மற்றும் ப்ளீஸ்டோசீன் காலத்தின் பிற்பகுதியைச் சேர்ந்தவையாகும்.
- சந்திராபூர் மாவட்டத்தில் கண்டறியப்பட்ட யானைப் படிவமானது, அது 15 அடி உயரம் கொண்டது என காட்டுகிறது.
- இந்த இடத்தில், அழிந்து போன இனமான எலிபாஸ் நமடிகஸ் எனும் இனத்தின் யானை போன்ற தலை கண்டுபிடிக்கப் பட்டதன் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த யானை இனம் ஆனது, சுமார் 2 லட்சம் முதல் 11,700 ஆண்டுகளுக்கு முன்னதான ப்ளீஸ்டோசீன் காலத்தில் இந்தியாவில் வாழ்ந்தது.
- இந்த காலக் கட்டத்தின் கடைசி காலம் பனிக்காலம் ஆகும்.
- இந்தப் பனியுக காலத்தில் பனிப்படலங்கள் உருகியபோது, இந்தியாவில் மிகப்பெரும் வெள்ளம் ஏற்பட்டது.
- இந்த வெள்ளத்தில் பல இனங்கள் அழிந்து போயின.
- இந்த வெள்ளத்தின் வண்டல் படிவுகளில் பல உயிரினங்களின் சான்றுகள் காணப்

படுகின்றன.

- மகாராஷ்டிராவின் சிந்துதுர்க், புனே மற்றும் சோலாப்பூர் ஆகிய மாவட்டங்களிலும், தெலுங்கானாவின் சில இடங்களிலும் ஆசிய யானைகளின் பல்வேறு புதைபடிவங்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- ஆனால் மகாராஷ்டிராவில் ஸ்டெகோடன் யானைகளின் புதைபடிவங்கள் கண்டறியப் படுவது இது முதல் முறையாகும்.
- இதில் பெண்கங்கை ஆறு (676 கிலோ மீட்டர்) ஆனது மகாராஷ்டிராவின் ஔரங்காபாத் மாவட்டத்தில் உள்ள அஜந்தா மலைத்தொடரில் உற்பத்தியாகிறது.
- இது மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றின் மாநில எல்லைகளுக்கு இடைப்பட்டப் பகுதியில் பாய்ந்து வர்தா நதியில் கலக்கிறது.
- இந்தியப் புவியியல் ஆய்வு மையத்தின் தலைமையகம் கொல்கத்தாவில் அமைந்து உள்ளது.

## மிசோரமில் உள்ள பழமையான குடைவரைத் தளங்கள்




- இந்தியத் தொல்லியல் துறையானது (ASI) மிசோரம் மாநிலத்தில் 4 நூற்றாண்டுகள் பழமையான குடைவரைத் தளங்களைக் கண்டறிந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- இது 16 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டக் காலத்தினைச் சேர்ந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- சம்பை, கசௌல், சைத்துவல் மற்றும் செர்ச்சிப் ஆகிய 4 மாவட்டங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டன.
- மைட் கிராமத்தில், ஒரு பாறைக் குன்றில் ஒரு சிறிய அளவிலான மனித உருவங்கள், சில விலங்குகள், சேமக் கலம், காயல் எனும் மாட்டினத்தின் தலைகள் மற்றும் சில அடையாளம் கண்டறிய முடியாத சின்னங்கள் ஆகியவற்றால் சூழப்பட்ட ஒரு பெரிய மனித உருவம் காணப் படுகிறது.
- மிதுன் (போஸ் பிராண்டாலிஸ்) என்பது இந்தப் பகுதியில் காணப்படுகின்ற பகுதியளவு பழக்கப் படுத்தப்பட்ட வளர்ப்பு மாடு ஆகும்.
- 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், இந்தியத் தொல்லியல் துறை (ASI) ஆனது சம்பை மாவட்டத்தில் உள்ள வாஞ்சியா பகுதியினை அங்கீகரித்தது.
- இது குடியிருப்புகள் இருந்ததற்கான அறிகுறிகளைக் கொண்ட இடமாக இருந்தது.

- இது புதியக் கற்காலத்தின் "அழிந்து போன நாகரீகத்துடன்" தொடர்பினைக் கொண்டு இருக்கலாம் என்பதோடு இது "வாழ்வியல் வரலாற்று அருங்காட்சியகம்" என்று இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★